www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு – 2024

## ஆறாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்:60

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10x1=10

1. ஏற்றத்தாழ்வற்ற ________ அமைய வேண்டும்.
அ) சமூகம் ஆ) நாடு இ) வீடு ஈ) தெரு
2. செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
அ) செந்+தமிழ் ஆ) செம்+தமிழ் இ) சென்மை+தமிழ் ஈ) செம்மை+தமிழ்
3. 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ________
அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை
4. கதிரவனின் மற்றொரு பெயர் ________
அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்
5. நுட்பமாகச் சிந்தித்து அறிவது ________
அ) நூலறிவு ஆ) நுண்ணறிவு இ) சிற்றறிவு ஈ) பட்டறிவு

நிரப்புக:

6. உலக சதுரங்க வீரரை வெற்றி கொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ________
7. கிணறு என்பதைக் குறிக்கும் சொல் ________
8. குறில் எழுத்தை ஒலிக்கும் கால அளவு ________ மாத்திரை.

பொருத்துக:

9. முத்துச்சுடர் போல – மாடங்கள்
10. தூயநிறத்தில் – தென்றல்
– நிலா ஒளி

II எவையேனும் ஐந்து மட்டும் எழுதுக: 5x2=10

1. தமிழ்மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
2. தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?
3. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?
4. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
5. மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?
6. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
7. செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?
8. 'ரோபோ' என்னும் சொல் எவ்வாறு உருவானது?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

III எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3x3=9

1. எந்திர மனிதனின் பயன்களை விளக்குக ?
2. மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை ?
3. சார்பெழுத்துகள் எத்தனை ? அவை யாவை ?
4. சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
5. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.

IV அடிபிறழாமல் எழுதுக 5+2=7

1. **தமிழுக்கும்** ... எனத் தொடங்கும் இன்பத்தமிழ் பாடல்

(அல்லது)

**காணி நிலம்** ... எனத் தொடங்கும் பாரதியார் பாடல்

2. **அன்பிலார்** ... எனத் தொடங்கும் குறட்பா

V தகுந்த விடைகளை எழுதுக 5x2=10

1. பிறமொழிக் கலப்பின்றி எழுதுக.
   பெற்றோரிடம் பர்மிசன் லெட்டர் வாங்கி வரச் சொன்னாங்க.
2. புதிய சொற்களை உருவாக்குக
   1) பரிபாடல் 2) கவிதை
3. வாக்கியத்தில் அமைத்து எழுதுக
   1) வாழ்நாள் 2) செயற்கை
4. கலைச்சொற்களை அறிந்து எழுதுக
   1) Satellite 2) Weather
5. இனிய உளவாக இன்னாத கூறல்
   கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.
   – எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

VI வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக 2x7=14

1. அ) சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார் ?

   (அல்லது)

   ஆ) கிழவனும் கடலும் என்னும் கதையைச் சுருக்கி எழுதுக ?
2. அ) விடுப்பு விண்ணப்பம் எழுதுக ?

   (அல்லது)

   ஆ) "அறிவியல் ஆக்கங்கள்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக ?

***/***

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com